## பெற்றோரின் மனப்பூர்வமான நன்றிகள்

கலைகளில் அருங்கலை நடனக்கலை அது தெய்வக்கலையாகும். சாஷ்திரீய நடனக்கலையாகிய பரத நாட்டியக்கலை தமிழர் பண்பாட்டில் மட்டுமன்றி வேறு பிற மொழிப் பண்பாட்டிலும் கூட மேலானதாகும். தமிழர்களின் கலைகளின் மகுடமாகத் திகழ்கின்ற பரத நாட்டியம் உலகெங்கும் ஆடற்கலையின் பெருமையைப் பறைசாற்றி வருகின்றது. அந்தவகையில் ஆசிரியை ஸ்ரீமதி யாழினி பா. பாலேந்திரன் அவர்கள் தனது பரதநாட்டிய ஆரம்பக் கல்வியை யாழ் சதங்கை நர்த்தனாலய ஆசிரியை நடனக்லாஜோதி லீலா நாராயணன அவர்களிடம் பயின்று பின்னர் திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் நுண்கலைக்கான இளமானிப்பட்டபடிப்பை கற்று அதில் தேர்ச்சி பெற்று முதுமானிப்பட்டப் படிப்பிலும் சிறப்பு தேர்ச்சி பெற்று பரதக்கலையில் மிகவும் மெருகு சேர்த்துள்ளார். அவர் தனது பல மாணவியர்களுக்கு விடா முயற்சியோடும் பொறுப்போடும் கலைகளின் நுட்பங்களை கற்பித்த பெருமையினால் ஆசிரியை சிறந்து விளங்குகிறார்.

எங்கள் மகள் செல்வி நிஜா அவர்கள் தன் மாணவியாக எண்ணிக்கொள்ளாமல் தன் மகள்போல் ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் கலைகளின் நுணுக்கங்களை கற்பித்ததோடு பாவம் ராகம் தாளம் ஆகியவற்றில் நாட்டமுடையவராக்கி இன்று இங்கு அரங்கேற்றிவைத்த அவர்களின் கலைப்பணியால் பரதக்கலை மேலும் மெருகு பெற ஆசிரியை ஸ்ரீமதி யாழினி பா. பாலேந்திரன் அவர்களுக்கு எமது வாழ்த்துக்களும் உளமார்ந்த நன்றிகளும் உரித்தாகுக.

மேலும் ஆசிரியை கலைமாமணி ஸ்ரீமதி குமுதினி பிருத்விராஜ் அவர்கள் எமது மகளும் சிறு வயதில் முறைப்படி வாய்ப்பாட்டை பயில்வித்த பெருமைக்குரிய ஆசிரியை ஆவார் அவருக்கும் மற்றும் பக்கவாத்தியக் கலைஞர்களுக்கும் எங்களின் பணிவான அழைப்பை எற்று பல சிரமத்தின் மத்தியிலும் வருகை தந்திருக்கும் அனைவருக்கும் மற்றும் பிரதம சிறப்பு விருந்தினர்கள் அத்துடன் இந் அரங்கேற்ற நிகழ்ச்சித் தொகுப்பபாளர்களுக்கும் ஒலி ஒளி அமைப்பாளர்களுக்கும் படப்பிடிப்பாளர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகர்க்கும்".





# Bharathanatya Arangetram

## Nejah Thevarajah

Saturday 10th November 2012



Disciple of

"Bharatha Kalaimani"

**Yalini P. Balendren,** MA Bharathanatyam



File Name : Yalini - Brouchure



# குருவிற்கு சமர்ப்பிக்கும் நன்றிகள்

மாதா பிதா குரு தெய்வம் என்னும் தமிழரின் பாரம்பரியத்திற்கு அமைய எனது தெய்வங்களாகிய பெற்றோருடன் எனக்கு நல் வழிகாட்டலில் உறுதுணையாக இருக்கின்ற எனது குருவிற்கு முதலில் சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன்.

மற்றும் ஆடற்கலை அரசன் தில்லை நடராஜப் பெருமானின் பொற்பாதம் பணிந்து அழகு கலையை அன்று ஸ்ரீமதி யாழினி பா. பாலேந்திரன் அவர்களிடம் அர்ச்சனை மலர்களாலேயே ஆறு வயதில் ஆரம்பித்தேன். இன்று அரங்கேறும் இப்பொன்னாளில் அன்னைபோல் என்னை அரவணைத்து பாவம் ராகம் தாளம் ஆகியகலைகளின் நுட்பங்களையும் நுணுக்கங்களையும் பொறுப்போடும் பக்தியோடும் பயில்வித்து இக்கலையில் என்னை நாட்டமுடைய மாணவியாக்கி இங்கே இன்று என்னை அரங்கேற்றிவைக்கும் பெருமைக்குரிய எனது குருவிற்கு மிக மகிழ்வோடு அவர் பாதம் தொட்டு வணங்கி எனது மனப்பூர்வமான நன்றிகளை கூறிக்கொள்கிறேன்.



# அம்மப்பா அம்மம்மா கூறும் வாழ்த்துக்கள்



நாட்டிய கலையானது உள்ளத்திற்கும் உடலுக்கும் பரவசமூட்டும் தெய்வீகக் கலையாகும். அந்த வகையில் எங்களின் அன்பான மூத்த பேத்தி செல்வி நிஜா பரதக்கலையில் மிக ஆர்வம் கொண்டு நடனக்கலையை சிறு வயதில் இருந்து பயின்று இன்றைய தினம் அரங்கேறுவதையிட்டு நாம் மிக மகிழ்ச்சி அடைகிறோம். இக்கலையை தொடர்ந்து மேன்மேலும் கற்று இந்த புலம் பெயர் நாட்டில் மிக்க புகழுடன் நாட்டியத்தின் பெருமையை நாளை நீ நிலைநாட்டி நாடுபூராகவும் உன் நடனக்கலை உயர்ந்து பாராட்டுப் பெற்று வாழ நல்லாசி கூறுகின்றோம்.

அன்புடன்

**அம்மப்பா - அம்மம்மா**



# பெரியப்பா பெரியம்மா மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

கலையுலகில் நாட்டியத்தால் பெயரை நாட்டி
கண்ணியம் சேர் நெறியினிலே வாழி! வாழி!!
நிலையுலகில் கலயொன்றே மகுடம் என்று
நீள்புவியில் தடம்பதித்தே வாழி! வாழி!!
அலையலையாய் ரசிகர் உனை சூழ்ந்து சேர
ஆனந்த அரங்கேற்றம் கண்டு வாழி!!
மலையரசன் மணவாட்டி கூத்தர் அன்றோ
மனம் நிறைய வாழ்த்துகிறோம் வாழி! வாழி!!
ஆயகலை அறுபத்து நான்கும் கிட்ட
அன்பு அறன்நெறி வாழ்வில் பொங்க நீடு
சேயனைய செல்வமென நாங்கள் வாழ்த்த
சிறப்புடனே கலையரசாய் வாழி! வாழி!!
தூயவருள் கணபதி தன் தாள் இறைஞ்சி
தூய்மையுடன் வாழ்த்துகிறோம் வாழி! வாழி!!
வாயார மனதார வாழ்த்துகிறோம் வளமுடனே இனிதாக வாழி! வாழி!!

வாழ்த்துக்கள்

**பெரியப்பா - பெரியம்மா**





*File Name : Yalini - Brouchure*

# Accompanying Artists



Kumuthaa



Violin: K.T. Sivaganesan





Giridara .S.V



Vocal: T. Nithusija



Fute P. Gnanavarathan

# About My Guru

## Smt. Yalini P. Balendren

*(Specialist in Pediatric Nursing)*

1996 The first performer of Bharathanatya Arangetram in Denmark

1999 Yalini founded "Narthanalayaa" with the intention of committing herself to the propagation of the classical arts.

2001 Under the guidance of the distinguished exponent of Bharathanatyam, Padmashri Chitra Visweswaran, Yalini received bharathanatya teaching certificate.
Awarded the title "Nithya Bharatha Jothi"
by veena vidwan Pitchumani Iyar and Natya visaratha
R. Padma (Naratha Gana Saba in India)

2006 Enrolled as a student at Faculty of Arts,
Bharathidasan University at Thiruchirappalli, India

2009 B.F.A. degree in Bharathanatyam

2011 M.F.A. degree in Bharathanatyam
Arwarded the title "Bharatha kalaimani" by R. Uma Maheswari
(director of Kongu kalamandalm, M.A Yoga,
& school headmaster) Ph d student bhrathanatyam, Kalai Kaviri College of Fine Arts





*File Name : Yalini - Brouchure*

## குருவின் ஆசியுரை



தெய்வீகக் கலையான நாட்டியக் கலையானது இப்பிறவியிலேயே சொர்க்கத்தைத் தரக்கூடியது. இந்த நாட்டியத்தைப் பயில்கின்றவர்கள் வேகமும், விவேகமும், பாவமும், மென்மையான சுபாவமும் இயற்கையாகவே அடைவார்கள். அத்துடன் நாட்டியக்கலையை மருத்துவக் கலை என்றும் கூறுவார்கள். நாட்டியம் பயில்பவர்களுக்கு உடலில் உள்ள அனைத்துச் சுரப்பிகளும் உடலின் தேவைகளுக்கேற்ப கட்டுப்படுத்தப்படுகின்றன என்பது மருத்துவக்கூற்று.

செல்வி நிஜா தேவராஜா இக்கலையைக் கடந்த பதிமூன்று வருடங்களாக விடா முயற்சியுடனும், குரு பக்தியுடனும் கற்று அரங்கப் பிரவேசம் காணும் அளவிற்கு உயர்ந்துள்ளார். இவர் எனது நித்திய சதங்கை நர்த்தனாலய மாணவிகளுள் அரங்கேற்றங் காணும் ஆறாவது மாணவி என்பதைப் பெருமையுடன் கூற விரும்புகின்றேன். அவர் England OEBL பரீட்சையில் தரம் ஆறுவரையிலும், Swiss IITA பரீட்சையில் தரம் நான்குவரையிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளார். பல நாட்டிய நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய மாணவி என்பதைக் கூற விரும்புகின்றேன்.

இவரின் இன்றைய வளர்ச்சிக்குக் காரணமாக விளங்கும் இவரின் பெற்றோரைப் பாராட்டுவதோடு இவர் இத்துடன் நின்றுவிடாது மென்மேலும் இக்கலையைக் கற்றுச் சிறப்புற வேண்டும் என இறைவனை வேண்டி எனது இதயபூர்வமான நல்லாசிகளை வழங்கி வாழ்த்துகின்றேன்.

**ஸ்ரீமதி யாழினி பா. பாலேந்திரன்**



## ஸ்ரீமதி யாழினி பா. பாலேந்திரன்
## நட்டுவாங்கம், நடன அழைப்பு





பரதநாட்டிய ஆரம்பக்கல்வியையாழ் சதங்கை நர்த்தனாலய ஆசிரியை, நடனக்கலாஜோதி லீலாநாராயணன் அவர்களிடம் பயின்றார். பின்னர் திருமதி மாலாசத்தியமூர்த்தி அவர்களிடத்தில் இக்கலையைக் கற்று டென்மார்க்கில் முதல் மாணவியாக அரங்கேற்றம் செய்து கொண்டவர் என்ற பெருமையும் பெற்றவர். அத்துடன் ஈழத்தமிழர் கலையரங்கத்தினர் 1996ஆம் ஆண்டிற்கான சிறந்த கலைஞர் விருதினை வழங்கிக் கௌரவித்தனர். 1998ஆம் ஆண்டு இந்தியாவில் நட்டுவாங்கம் உட்பட பல உருப்படிகளையும் (குச்சுப்புடி, மோகினி ஆட்டம், பொம்மைநடனம்) பயின்று சென்னை நாரதகான சபாவில் சிறப்பு நிகழ்ச்சி ஒன்றினை நடாத்தினர் இந்நிகழ்வில் “நித்தியபரதஜோதி” என்ற சிறப்புப் பட்டத்தினை வீணைவித்து வான் பிச்சுமணிஐயர் முன்னிலையில் பெற்றுக்கொண்டார். அத்துடன் “நிருத்திய சூடாமணி கலைமாமணி பத்மஸ்ரீ” சித்ராவிஸ்வேஸ் என்னிடம் பரதக்கலையைத் தொடர்ந்து கற்று கொடுப்பதற்கான சான்றிதழையும் பெற்றார். திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் வளாகம் கடந்த நுண்கலைக்கான இளமானிபட்டப்படிப்பை 2006 முதல் கற்றுக் கொண்டு சிறப்பாகத் தேர்ச்சி பெற்று 2009 முதல் முதுமானிபட்ட படிப்பை அதே பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டு 2011ல் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளார் இவர் 2010ம் ஆண்டு கொங்குகலாமண்டலம் அதிபர் நடன ஆசிரியை திருமதி R. உமாமகேஸ்வரி (Ph.D. Fellow Kalai Kaviri College of fine Arts India) அவர்களால் “பரதக்கலைமணி” பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# Blessing Message

## Ambihai Seevaratnam





கலாலயம் நடனப் பள்ளி
ஐக்கிய இராஜியம்

Kalaalayyam - School of Dance
Registered Charity - 1107575
624 Kenton Road
Middlesex HA3 9NR
Email: Kalaalayyam@live.com

அன்புடன் திருமதி யாழினிக்கு

குமாரி நிஜா தேவராஜா அவர்களின் பரத நாடிய அரங்கேற்றமிட்டு பெரு மகிழ்ச்சி அடைகிறேன். ஆறு வயது சிறுமியாக தங்களிடம் பார் புகழும் இக் கலை தனிப் பாங்குறப் பயின்று. இன்று குருவின் வழிகாட்டலில் தன் கலையினை உலக அரங்கில் சமர்ப்பிக்கும் முதலாய பெருவிழாவாகும்.

குரு பக்தியும், பணிவோடு கூடிய ஆளுமையும் உடைய உங்களுக்கும் உங்கள் வழி நின்று பெற்றாரை, உற்றாரை, குருவை, தனது தாய்த்திரு நாட்டைப் பெருமையுற, தன்னிகர் இல்லா தனிப் பெரும் கலையினைப் பண்போடு சமர்ப்பிக்கும் இன்றைய கதா நாயகி நிஜா தேவராஜாவிற்கும் வாழ்த்துக்கள். உங்கள் இருவர் கலையும் மென்மேலும் வளர எல்லாம் வல்ல ஆடல் நாயகனாம் நடராஜர் பொற்பதம் பணிந்து வாழ்த்துகின்றேன்.

புலம் பெயர்ந்து, பேர் அழிவுகளின் மத்தியிலும் தமிழர் கலை கலாச்சாரத்தினைப் பேணித் தமிழும், தமிழீழமும் இவ்வையகம் உள்ள வரை தலை சிறந்து வாழும் என்பதை நிலை நாட்ட உழைத்த திரு திருமதி தேவராஜா அவைகளுக்கும் எனது நன்றி கலந்த பாராட்டுக்கள்.

என்னைப் பிரதம விருந்தினராக அழைத்த உங்களுக்கும், திரு திருமதி தேவராஜா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இங்கனம்

சீவரத்தினம்.

குமாரி அம்பிகை சீவரத்தினம்
இயக்குனர் - கலாலயம் நடனப் பள்ளி



# செல்வி நிஜா தேவராஜா அவர்களின் நடன அரங்கேற்றத்தையொட்டி ஹேரல்ஸ்ரெப்றோ மாலதி தமிழ் கலைக்கூட நிர்வாகத்தினரின் வாழ்த்துரை

திரு. திருமதி தேவராஜா ஆகியோரது சிரேஷ்ட புத்திரி செல்வி நிஜா அவர்களது நடன அரங்கேற்றம் 10.11.12 அன்று நடைபெற இருப்பதையிட்டு மிக மகிழ்ச்சி அடைகிறோம். ஹேரல்ஸ்ரெப்றோ மாலதி தமிழ்க்கலைக்கூட நடன ஆசிரியை திருமதி யாழினி பா. பாலேந்திரன் அவர்களிடம் பரதக்கலையைப்பயின்ற செல்வி நிஜா எமது கலைக்கூடத்தில் பயின்று அரங்கேற்றம் செய்யும் முதல் மாணவியாவார் என்பதில் நாம் பெருமையடைகிறோம். இச்சந்தர்ப்பத்தில் பரதநாட்டியக்கலையை பல ஆண்டுகள் பல விற்பன்னர்களிடம் பயின்று அக்கலையில் முதுகலைமானிப்பட்டம் பெற்று டென்மார்க் நாட்டில் பல ஆண்டு காலமாக பலமாணவியர்களுக்கு இக்கலையை பயிற்றுவித்து பலருக்கு அரங்கேற்றமும் சிறப்பாகச்செய்துள்ள ஆசிரியை திருமதி யாழினி பாலேந்திரன் அவர்களின் கலைச்சேவையைப் பெரிதும் பாராட்டுகிறோம்.

செல்வி நிஜா தேவராஜா அவர்கள் தான் பயின்ற பரதக்கலையை மேலும் பயின்று பலராலும் பாராட்டப்பெறும் சிறந்த ஒரு நாட்டிய தாரகையாக மிளிர ஆடல் அரசனாம் தில்லையம்பலத்தான் திருவருள் பெற வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.





File Name : Yalini - Brouchure



# Repetoire

| | Ragam | Thalam |
|---|---|---|
| Pushpanjali | Saraswathi | Aadhi |
| Alarippu | Naddai | Thisra Eakam |
| Jatheeswaram | Hindolam | Aadhi |
| Natarajah Kavuthuvam | Ragamalika | Aadhi Kanda Nadai |
| Varnam | Kalyani | Aadhi |

## INTERMISSION




| | | |
|---|---|---|
| Keerthanam | Purvikalyani | Rupakam |
| Patham | Madhuvandhi | Aadhi |
| Doll Dance | Kavadi Chinthu | Aadhi |
| Thillana | Kathanakuthuhalam | Aadhi |



# Blessing Message

## - Kumuthini Prithviraj



சாகித்ய சுருதிலயா இசைக்கல்லூரி

SAHITHYA SRUTHILAYA MUSIC COLLEGE

DIGEVEJ 22. 7400 HERNING, DENMARK.Tel: 004526662873, e.mail. sahithyan02@yahoo.com

### பாராட்டி வாழ்த்துகிறேன்

தமிழர்களின் ஆரம்பகால வரலாறு தொட்டு தமிழிர்களின் கலைகளில் மிக உன்னதமான கலைகளில் ஒன்றாக பரதக்கலை விளங்கி வருகிறது. அப்படிப்பட்ட ஒரு கலையை புலம்பெயர்ந்த மண்ணில் மிகவும் ஆர்வத்துடன் கற்று வரும் செல்வி. நிஜா தேவராஜா அவர்களை மனதார பாராட்டுகின்றேன். செல்வி நிஜா தேவராஜா என்னிடம் பலவருடங்களாக இசை பயின்றவர். மிகவும் அமைதியான சுபாவம் கொண்டாலும் தன்னிடமுள்ள திறமையை வெளிக்காட்டத் தயங்காமல் பல மேடைகளில் தனது திறமையை வெளிப்படுத்தியவர்.

எந்தக்கலையைக் கற்பதென்றாலும் பல திறமைகள் கொண்ட நல்லதொரு குரு அமைவது அவசியம். அந்தவகையில் செல்வி. நிஜா தேவராஜா அவர்களிற்கு ஆடற்கலையை அழகுற கற்பித்து அரங்கேற்றம் காண வழிவகுத்த ஆசிரியை ஸ்ரீமதி. யாழினி பாலேந்திரன் அவர்கள் மிகவும் பாராட்டப்படவேண்டியவர். சிறந்த குருவுடன் சிறந்த பெற்றோரும் அமைவது மிகமுக்கியம். செல்வி. நிஜா அவர்களின் பெற்றோர் நிஜாவின் முயற்சிகளிற்கு மிகவும் உறுதுணையாகவும் ஆர்வத்துடனும் இருப்பது இவரின் உயர்வுக்குக் காரணமாகும். செல்வி. நிஜா அவர்களின் சிறந்த பெற்றோரையும், கலைக்குருவையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

மேலும் செல்வி. நிஜா தேவராஜாவின் இந்த அரங்கேற்றம் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல நடராஜப் பெருமானை நினைந்து செல்வி. நிஜாவை பாராட்டி வாழ்த்துகின்றேன்.

ஸ்ரீமதி. குமுதினி பிறித்விராஜ்
சாகித்ய சுருதிலயா இசைக்கல்லூரி.
டென்மார்க்

*" Arangetram" literally means asscending the stage. It represent the transition from a student for mature performer, yet, it is only the first step of an artists career.*





*File Name : Yalini - Brouchure*